[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஒ) இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2023), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 21]

*மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2023)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் கட்டணம் பல மடங்கு கடுமையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்த்தலாம்; ஆனால், இந்தளவுக்கு உயர்த்துவது சரியில்லை. ஆகவே, இந்தக் கட்டண உயர்வில் கொஞ்சம் தளர்வு ஏற்பட வேண்டுமென்று இந்தச் சட்டத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் கட்டணம் பத்து மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, தளர்வு வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.100/– என்றிருந்ததை ரூ.200/–, ரூ.300/– ஆக உயர்த்தினால் பரவாயில்லை. ஆனால், ரூ.1,000/– என்பது அதிகம். எனவே, அந்தக் கட்டண உயர்வைக் குறைக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

@ 17-4-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் கட்டணத்தைப் பொறுத்தவரையில், கட்டண உயர்வால் இன்றைக்கு real estate தொழில் செய்பவர்கள் எல்லோரும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், கட்டண உயர்வு மிகவும் அதிகம். எனவே, அதனைப் பரிசீலனை செய்து குறைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

***மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய முத்திரைச் சட்டம், 1899-ன்படி, பொதுமக்கள், வணிக நிறுவனங்கள், வங்கிகள் பயன்படுத்தும் பலவகையான ஆவணங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை நிர்ணயம் செய்யப்படுகிறது.

முத்திரைத் தீர்வையானது, சிலவகை ஆவணங்களுக்கு 1992 ஆம் ஆண்டும், சிலவகை ஆவணங்களுக்கு 2001 ஆம் ஆண்டும் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 20 முதல் 30 ஆண்டுகள் கடந்த நிலையில் இந்த முத்திரைத் தீர்வை விகிதம் மாற்றியமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், சில ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை விகிதங்களை மாற்றியமைக்க முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருத்தச் சட்டத்தின்மூலம் முத்திரைத் தீர்வை சதவிகிதம் பொது மக்கள் பயன்படுத்தும் சிலவகையான ஆவணங்களுக்குக் குறைக்கப்படுகிறது. உதாரணமாக, குடும்ப நபர்கள் என்ற வரையறை ஒரு குடும்பத்தில் இறந்தவர்களின் வாரிசுகளையும் சேர்க்கும் வகையில் மாற்றியமைக்கப்படுகிறது. இதனால், குடும்ப நபர்களுக்கு இடைப்பட்ட பாகம், விடுதலை, கூட்டுப் பங்காண்மை, கலைப்பு ஆகியவற்றிற்கு வழங்கப்படும் முத்திரைத் தீர்வை சலுகை அந்தக் குடும்பத்தில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் கிடைக்கும். முத்திரைச் சட்டத்தில் உள்ள 65 வகையான ஆவணங்களில் வங்கிகள், நிறுவனங்கள் போன்றவை பயன்படுத்தும் 15 வகையான ஆவணங்களுக்கு மட்டுமே முத்திரைத் தீர்வை விகிதம் மாற்றியமைக்கப்படுகிறது. சாதாரண பொது மக்கள் பெரும்பாலும் பயன்படுத்தும் ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை விகிதம் இந்தத் திருத்த சட்டத்தின்மூலம்

2023 ஏப்ரல் 21] [திரு. பி. மூர்த்தி]

மாற்றியமைக்கப்படவில்லை. இதனால், சாதாரண பொது மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

தற்போது, இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னதாக கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு முத்திரைச் சட்டம் என தனியாக சட்டம் கொண்டு வருவதற்காக, தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு 16–5–2013 மற்றும் 8–1–2019 ஆகிய நாட்களில் இரண்டு முறை இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. அவை மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படாமல் திரும்பப் பெறப்பட்டன. அந்த சட்டமுன்வடிவுகள்மூலம் 38 வகையான ஆவணங்களின் முத்திரைத் தீர்வையை அதிகரிக்க முன்மொழிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்தத் திருத்தச் சட்டத்தின்மூலம் 15 வகையான ஆவணங்களுக்கு மட்டுமே முத்திரைத் தீர்வையை மாற்றம் செய்ய முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. 2013 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள திருத்தச் சட்டமுன்வடிவில் 5 வகையான ஆவணங்களுக்கு அப்போது நிர்ணயிக்கப்பட்ட முத்திரைத் தீர்வையைவிட குறைவான முத்திரைத் தீர்வை விகிதமே தற்போது முன்மொழிவு செய்யப்பட்டுள்ளதுடன், 4 வகையான ஆவணங்களுக்கு அப்போது நிர்ணயிக்கப்பட்ட முத்திரைத் தீர்வையே தற்போதும் முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 வகையான ஆவணங்களுக்கு மட்டுமே முத்திரைத் தீர்வை சிறிது அதிகமாக முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

முந்தைய அரசால் கம்பெனிகள் பதிவிற்கான குறிப்பாணைக்கு 0.2 சதவிகிதம் (அதிகபட்சம் ரூபாய் 50 இலட்சம்) என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் தற்போது அதற்கு 0.05 சதவிகிதம் (அதிகபட்சம் ரூபாய் 5 இலட்சம்) என குறைக்கப்பட்டு முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. பொது அதிகார ஆவணத்திற்கு மொத்த மதிப்பில் 2 சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் தற்போது அது ஒரு சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. பிணைய ஆவணத்திற்கு ஒரு சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் தற்போது ரூபாய் 500 என குறைக்கப்பட்டுள்ளது. இரத்து ஆவணம் மற்றும் ஏற்பாடு இரத்து ஆவணங்களுக்கு அசல் ஆவணத்திற்கான முத்திரைத் தீர்வையே நிர்ணயிக்கப்பட்ட நிலையில் தற்போது

[திரு. பி. மூர்த்தி] [2023 ஏப்ரல் 21

அவை குறைக்கப்பட்டு முறையே ரூபாய் 1,000 மற்றும் ரூபாய் 500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இரத்து ஆவணம், சான்றிட்ட நகல், நோட்டரி முத்திரைவில்லை, கூட்டுப் பங்காண்மை நிறுவனம் பதிவு ஆகியவற்றிற்கு முந்தைய அரசால் 2013 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட முத்திரைத் தீர்வையே தற்போதும் முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. உறுதிமொழி மற்றும் உடன்படிக்கை ஆவணத்திற்கு முந்தைய அரசால் 100 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் தற்போது அதற்கு 200 ரூபாயும், பிரதி கட்டணம் மற்றும் அடமான மறுகிரய ஆவணத்திற்கு 100 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில், தற்போது அவற்றிற்கு முறையே 500 ரூபாய் மற்றும் 1,000 ரூபாய் எனவும், அறக்கட்டளை ஆவணத்திற்கு 200 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் தற்போது ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கு 4 சதவிகிதம் அதிகபட்சம் 1,000 ரூபாய் என முன்மொழிவு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: ஆகவே, முத்திரைத் தீர்வை, தற்போது கழக அரசுதான் உயர்த்தியுள்ளது என்பது தவறான ஒன்றாகும். முந்தைய ஆட்சியில், 2013 ஆம் ஆண்டில் முத்திரைத் தீர்வையை உயர்த்த, முன்மொழிவு செய்யப்பட்டதில் சிலவகை ஆவணங்களுக்கு மட்டுமே, தற்போது முத்திரைத் தீர்வை உயர்த்தப்பட்டு, முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2-ல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஓ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2023) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2023)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், உங்களுக்கு ஒன்றுமில்லையே உட்காருங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தொழிலாளர்கள் திருத்தச் சட்டத்தை ஆய்விற்கு எடுக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது, அந்தச் சட்டம் வரும்போது பேசுங்கள் வாய்ப்புத் தருகிறேன். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள், எந்த Bill-ஐப் பற்றிப் பேசுகிறீர்கள் எந்த Bill? (குறுக்கீடு) வரக்கூடிய Bill-ஐ பற்றித்தான் (குறுக்கீடு) இல்லை. வரும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் பேசி முடித்த பிறகு

@ 18-4-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.